Developing Thanjavur as Tourist Centre.

* *Q.*—Dr. T. R. JANARTHANAM (on behalf of Thiru D. Santosham) : Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state.

(*a*) whether there is any proposal to develop Thanjavur as a Tourist Centre ;

(*b*) if so, the details thereof; and

(*c*) whether the Tamil Nadu Hotel situated there is properly equipped and maintained, so as to give satisfactory service to the Tourists?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) தற்பொழுது பரிசீலனையில் இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

(உ) தமிழ் நாடு ஓட்டல் சகல வசதிகளுடன் அமைக்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : சுற்றுலா மையமாக அறிவிப்பதென்றால், அரசு அதற்காக என்னென்ன வசதிகள் செய்து தரும்? தமிழ் நாடு ஓட்டல் பற்றிக் குறிப்பிட்டார்கள். மேலும் இது போன்ற ஓட்டல்களை அதிகமாக அமைக்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : கேள்வி, தஞ்சாவூரை சுற்றுலா மையமாக அபிவிருத்தி செய்யும் செயற்குறிப்பு இருக்கிறதா என்பது. சுற்றுலா மையம் என்று குறிப்பாக எந்தப் பகுதியையும் நாம் அறிவிப்பதில்லை. பொதுவாக அங்கே இயற்கையாக அமைந்திருக்கின்ற தொல்பொருள் நினைவுச் சின்னங்கள் அல்லது இயற்கை அமைப்புகள் ஆகியவைகளை வைத்து எந்த அளவிற்குப் பயணிகள் விரும்பி வருகிறார்கள் என்பதையொட்டித்தான் அது விளம்பரப்படுத்தப்பட்டு அங்கே வசதிகள் செய்யப்படுகின்றன.

ஆனால் மாவட்ட சுற்றுலாத் தலங்கள் (excursion centres) என்ற வகையில் மாவட்ட மக்கள் விடுமுறைக் காலங்களில் போய் கண்டு களித்து பொழுது போக்க வசதியாக ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு இடங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். அதைத் தவிர மாநில அளவிலே,

தேசிய அளவிலே, உலக அளவிலே சுற்றுலா மையங்கள் என்பது இயற்கையாக அமைந்திருக்கின்ற அந்தச் சூழ்நிலையில் உருவாக்கப்பட்டு வருகின்றன, அப்படி சுற்றுலாப் பயணிகள் வருவதை வைத்து அங்கே அடிப்படை வசதிகள் (infrastructure facilities) செய்து தரப்படுகின்றன.

தஞ்சையைப் பொறுத்த வரையில், புகழ் பெற்ற ஆலயமும் அதைச் சுற்றி நல்ல சிறப்புமிக்க இயற்கைக் காட்சிகளும், சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களும் இருப்பதால், அதைச் சுற்றுலா வளர்ச்சிக்குரிய மையமாக அரசு கருதியிருக்கிறது. ஆகவே தமிழ் நாடு ஓட்டல் அங்கே நடத்தப்பட்டு வருகிறது. அதைப் போலவே பல ஓட்டல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. தேவைப்பட்ட இடத்திலே படுக்கைகளின் எண்ணிக்கை அதிகப்படுத்தப் படுகிறது. இளைஞர்கள் விடுதி என்ற அமைப்பின் மூலம் குறைந்த செலவில் தங்கும் வசதிகள் செய்யப்படுகின்றன. தனியாகக் கேள்வி கேட்டால், அதைப்பற்றிய கருத்துக்களைத் திரட்டி நல்ல விவரங்களைத் தர முடியும்.

வேப்ப மரங்கள்.

* 91 வினா—திரு. க. அருணாசலம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வேப்ப எண்ணெய் வளத்தைப் பெருக்கும் பொருட்டு, வேப்ப மரங்களை மானாவாரிப் பகுதிகளில் வளர்ப்பது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

(உ) எண்ணெய் வித்துக் குறைவை நிறைவாக்குவதில் வேப்ப வித்துக்களின் இடம் பற்றி ஆராய்ச்சி ஏதும் நடைபெற்றுள்ளதா ?

(எ) ஆம் எனில், அதன் முடிவுகள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) மற்றும் (இ) வேப்ப மரங்களை மானாவாரிப் பகுதிகளில் வளர்ப்பது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

(உ) எந்தெந்த வருடாந்திரப் பயிர்களுடன் வேப்ப மரத்தைப் பயிரிட்டுப் பயனடையலாம் என்பது பற்றியும் மற்றும் வேளாண்மை காடுவளர்க்கும் திட்டத்தின்கீழ் எரிபொருள், தீவனம், மரம் ஆகியவற்றிற்காக வளர்க்கப்படும் மரங்களில் வேப்ப மரத்தையும் சேர்த்துக் கொள்ளலாமா என்பது பற்றியும் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆராய்ந்து வருகிறது.